2019 ஜுலை 18] *[திரு. எம்.சி. சம்பத்]*

முற்பகல் 11–30

Pipeline *திட்டம் குறித்து கேரள மாநிலத்தில் ஓர் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. விவசாயிகளுடைய நலனுக்காக வெளியிடப்பட்டுள்ள அரசாணையை எங்களுடைய* Principal Secretary *அவர்கள் ஆய்வு செய்து, அது* better *ஆக இருந்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, பின்னர் அவருடைய ஒப்புதலைப் பெற்றுத்தான் நிறைவேற்றப்படும். பொதுவாகவே,* pipeline *புதைக்கிற விஷயத்தில் இந்த அரசு மிகக் கவனமாக இருக்கிறது. உச்ச நீதிமன்றத்திற்குப் போனது, உயர் நீதிமன்றத்திலிருந்து தீர்ப்பு வந்தது பற்றி உங்களுக்கெல்லாம் தெரியும். அதற்குப் பிறகு நிபுணர் குழு அமைக்கப்பட்டது. நிபுணர் குழுவினுடைய கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது. குழுவினுடைய 7–வது கூட்டத்திலே இந்த முடிவை எடுத்திருக்கிறார்கள்.* Pipeline*–ஐப் புதைக்கின்ற விஷயத்தில், மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களின் அரசு மிகக் கவனமாக இருக்கிறது. விவசாயிகளுடைய நலன் காக்கின்ற அரசு, விவசாயிகளுக்கு எந்தவிதப் பாதிப்பும் இல்லாமல் அந்த நிகழ்வு நடைபெறும் என்பதிலே இந்த அரசு மிகக் கவனமாக இருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், 2005–ல் ஒரு pipeline *போட்டிருக்கிறோம். 2008–ல் உங்களுடைய* period*-ல் மணலியிலிருந்து* Airport *வரை ஒரு* pipeline *போட்டிருக்கிறீர்கள். 2010–லே மணலியிலிருந்து சித்தூர், கர்நாடகா மாநிலத்திற்கு ஒரு* pipeline *போட்டிருக்கிறோம். அதெல்லாம் நடந்திருக்கின்றது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்தில்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

(ஈ) மனிதக் கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபடும் துப்புரவுத் தொழிலாளர்களின் உயிரிழப்பைத் தடுக்க மாற்று ஏற்பாடு செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, என்ன சொல்லுங்கள்? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், சற்று இருங்கள்.*

***திரு. கு. பிச்சாண்டி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தியாவிலே பாதாள சாக்கடைகளில் இறங்கி மனிதக் கழிவுகளைச் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபடும்போது அதிக அளவிற்கு உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. நம்முடைய தமிழகத்திலே 1993 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை 144 பேர் கழிவுகளை அகற்றும் இடங்களிலே மரணமடைந்திருக்கிறார்கள். அந்த அடித்தளத்து மக்களுக்கு சரியான பாதுகாப்பு உபகரணங்கள் இல்லாமல் இருக்கின்ற காரணத்தால், அவர்கள் உயிரிழக்கக்கூடிய ஒரு நிலை ஏற்படுகிறது. இப்போது கேரளாவிலே, பொறியியல் வல்லுநர்கள்* Bandicoot *என்ற ஓர் இயந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அந்த* robot *இயந்திரத்தின்மூலம் கழிவுகளை அகற்றுவதற்காக அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். ஆகவே, தாழ்த்தப்பட்ட, பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மரணம் அடையக்கூடிய சூழ்நிலையை மாற்றக்கூடிய வகையிலே, நம்முடைய தமிழகத்திலே அதற்காக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன? குறிப்பாக, கழிவுகளை அகற்றும் பணிகளை தனியார்தான் செய்கிறார்களே தவிர, அரசின் மூலமாகச் செய்வதில்லை. தனியார்கள் எந்த ஓர் அனுமதியும் பெறுவதில்லை. அதனால்தான் பாதாளச் சாக்கடைகளைச் சுத்தப்படுத்தும் பணியில் திடீரென இறங்கும்போது, வாயுக்கள் தாக்கி, அவர்கள் இறக்கக்கூடிய நிலையிருக்கிறது. ஆகவே, அரசு இதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடு)*

(உ) விருதுநகர் மாவட்டம், தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் குடிநீர் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தைத்தானே ஈர்க்கப் போகிறீர்கள்? சரி, சொல்லுங்கள்.*

***திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். விருதுநகர் மாவட்டத்தில் 7 பேரூராட்சிகள் மற்றும் 11 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 1,687 ஊராட்சிக் குடியிருப்புகளுக்காக தாமிரபரணி ஆற்று நீரை நீராதாரமாகக் கொண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை எங்களுடைய கழகத்*